[17th August 1963

Appendix V

[*Vide* Answer to Starred Question No. 211, on page 263 Supra.]

No memorandum was received in February 1963.

A memorandum submitted through the Collector of Tiruchirappalli by the Tamilnad Synthetic Stone Manufacturers' Association, Tiruchi and the Tiruchirappalli, District Synthetic Stone Cutters' Association, Tiruchirappalli, among other associations was received by Government in August 1962. It contained the following requests :—

(i) Appointment of a Commission to examine the actual position of the industry.

(ii) Distribution of raw materials such as rough synthetic stones through their associations.

(iii) Issue of licences for the import of raw materials. and

(iv) Establishment of another factory for the manufacture of raw materials.

The representation was examined by Government in consultation with the Director of Industries and Commerce who reported as follows :—

The distribution of raw material to this industry was made by the Indo-Swiss Synthetic Gem Manufacturing Company, Mettupalayam, who have to consider the request for increase of quota for Tiruchirappalli. The company has a programme for expansion of its existing capacity and when this is implemented more raw materials also could be released in the area.

The present production of the Company together with the import of raw materials at the present level, was not far short of the actual demand.

The scarcity was artificial and was created by a few capitalists and middlemen through whom the material was released in the market. It was with a view to overcome this defect and ensure an equitable distribution of the material to the actual workers, that the Tiruchirappalli Gem Cutters, Industrial Co-operative Society was started.

In the circumstances stated by the Director, no further action was taken by Government on the representation of the Synthetic Stone Manufacturers' Association.

Government have no information regarding the number of synthetic stone cutters thrown out of employment on account of gold control. The Government are examining the question as to what relief is called for to the synthetic stone-cutters.

[31–ம் பக்கத்திலுள்ள 211 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.]

1963 பிப்ரவரியில் மகஜர் ஒன்றும் வரவில்லை.

17th August 1963]

மற்ற சங்கங்களுடன் திருச்சியிலுள்ள திருச்சி ஜில்லா செயற்கை வைர உற்பத்தியாளர்கள் சங்கமும், திருச்சியிலுள்ள திருச்சி ஜில்லா செயற்கை வைரத் தொழிலாளர் சங்கமும், திருச்சிராப்பள்ளி கலெக்டர் மூலம் அனுப்பி வைத்த மகஜர் ஆகஸ்டில் அரசாங்கத்திடம் வந்து சேர்ந்தது. அதில் அடியிற்கண்ட வேண்டுகோள்கள் இருந்தன :—

(i) தொழிலின் உண்மை நிலையைப் பரிசீலனை செய்யக் கமிஷன் ஒன்றை நியமித்தல்.

(ii) பட்டை தீட்டப்படாத செயற்கை வைரக் கற்கள் போன்ற மூலப் பொருள்களைத் தங்கள் சங்கங்கள் மூலம் விநியோகித்தல்.

(iii) மூலப் பொருள்களை வழங்க லைசென்சுகள் வழங்குதல்.

(iv) மூலப் பொருள்களை உற்பத்தி செய்ய மற்றுமொரு தொழிற்சாலை அமைத்தல்.

இந்த முறையீடுகளை அரசினர் தொழில்—வணிகத்துறை டைரக்டருடன் கலந்து ஆலோசித்தனர். டைரக்டர் தெரிவித்ததாவது :—

இத் தொழிலுக்கு மூலப் பொருள் வழங்கும் வேலையை மேட்டுப் பாளையத்திலுள்ள இந்தோ-ஸ்விஸ் செயற்கை வைரக் கற்கள் தயாரிப்புக் கம்பெனி கவனித்துக்கொண்டது. திருச்சிராப்பள்ளிக்கு அதிகக் கற்கள் ஒதுக்கும் விஷயத்தை இக் கம்பெனிதான் ஆலோசிக்கவேண்டும். இக் கம்பெனி தனது உற்பத்தித் திறனை அதிகரிக்க உத்தேசித்துள்ளது. இது நிறைவேறியவுடன் இப்பகுதியில் அதிக மூலப் பொருள் வழங்க முடியும்.

மேட்டுப்பாளையம் கம்பெனி உற்பத்தியையும் இப்போது இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருளையும் சேர்த்துப் பார்த்தால், அது தேவைக்கு மிகவும் குறைவாக இல்லை.

இப்பற்றுக்குறை செயற்கையானதே. மார்க்கெட்டில் இவற்றைப் புழங்க விடும் ஒரு சில முதலாளிகளும் இடைத் தரகர்களும் வேண்டுமென்றே இப் பற்றுக்குறையை சிருஷ்டித்துள்ளனர். இக் குறைப்பாட்டைப் போக்கவும், வாஸ்தவமான தொழிலாளர்களுக்கு நியாயமான முறையில் இப் பொருள்களை வழங்கவும் திருச்சிராப்பள்ளி வைரப் பட்டை தீட்டுவோரின் தொழில் கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

டைரக்டர் மேற்கண்டவாறு கூறியுள்ள நிலைமையில், செயற்கை வைர உற்பத்தியாளர் சங்கம் செய்துகொண்ட முறையீடு மீது அரசினர் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

தங்கக் கட்டுப்பாடு காரணமாக வேலையிழந்த செயற்கை வைரப் பட்டை தீட்டுவோர் எண்ணிக்கை குறித்து அரசாங்கத்துக்குத் தகவல் ஏதுவுமில்லை. செயற்கை வைரப் பட்டை தீட்டுவோருக்கு என்ன பரிகாரம் அளிக்கவேண்டும் என்பதை அரசினர் பரிசீலனை செய்து வருகின்றனர்.

APPENDIX VI.

[*Vide* answer to Unstarred Question No. 12 on page 272 supra.]

List Showing the Number and name of the Estate villages Notified in Dharmapuri taluk, salem District, under section 13 of survey and Boundaries Act VIII *of* 1923,

No.	Name of the village.		
145	Pallipatti	..	பள்ளிப்பட்டி
146	Andharahalli	..	அந்தரஹள்ளி
147	Kariappanahalli	..	கரியப்பணஹள்ளி
154	Naganampatti	..	நாகனம்பட்டி
112	Budihalli	..	புடிஹள்ளி